## October 15, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் 15 பில்லியன் டாலர் (சுமார் ரூ.1.33 லட்சம் கோடி) மதிப்பில் செயற்கை நுண்ணறிவு தரவு மையம் அமைக்க கூகுள் நிறுவனத்துடன் மாநில அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்தியாவில் கூகுள் நிறுவனம் மேற்கொள்ளும் மிகப் பெரிய முதலீடு இதுவாகும்.
   i. அதானி குழுமமும், ஏர்டெல் நிறுவனமும் கூகுளுடன் இணைந்து கட்டமைக்கும் இந்த புதிய திட்டத்தின் மூலம் சுமார் 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கணக் கிடப்பட்டுள்ளது.
   ii. புது தில்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, கூகுள் நிறுவனத்தின் கூகுள் கிளவுட் சேவையின் தலைமைச் செயல் அதிகாரி தாமஸ் குரியன் உள்ளிட்டோர் முன்னிலையில் இதற்கான ஒப்பந்தம் கையொப்பமானது.
   iii. இதுதொடர்பாக சந்திரபாபு நாயுடு 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்ததாவது: - விசாகப்பட்டினத்தில் அமைக் கப்படும் செயற்கை நுண்ணறிவு தரவு மையமானது இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு நகரத்துக்கு அடித்தளமாக இருக்கும். அத்துடன் இந்த மையம் அமெரிக்காவுக்கு வெளியே அமைக்கப்படும் மிகப் பெரிய செயற்கை நுண்ணறிவு தரவு மையமாக விளங்கும். இது மட்டுமன்றி கூகுளின் கடல்வழி இணைய கேபிள்களை நிலத்துடன் இணைக்கும் மையமும் விசாகப்பட்டினத்தில் செயல்படும். இது நாட்டின் எண்ம (டிஜிட் டல்) தொழில்நுட்பத்தை வலுப்படுத்தும். இதன்மூலம், உலகையே இணைத்து வசுதைவ குடும்பக (உலகமே ஒரு குடும்பம்) உணர்வை இந்தியா உயிர்ப்பித்துள்ளது.
2. 11-ஆவது முறையாக விண்ணில் ஏவி சோதிக்கப்பட்ட ஸ்பேஸ்- எக்ஸ் நிறுவனத்தின் பிரம்மாண்ட ஸ்டார்ஷிப் ராக்கெட் வெற்றிகரமாக தனது பணிகளை நிறைவேற்றியது.
   i. டெக்ஸாஸில் உள்ள ஸ்பேஸ்-எக்ஸின் ஸ்டார்பேஸ் ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட்ட அந்த ராக்கெட், பூமியைச் சுற்றிவந்து முன்பைப் போலவே போலியான செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது. பின்னர் அது மீண்டும் பூமிக்குத் திரும்பி ஏவுதளத்தில் தரையிறங்கியது.
   ii. 123 மீட்டர் உயரம் கொண்ட உலகின் மிகப்பெரிய மற்றும் சக்திவாய்ந்த இந்த ராக்கெட் மூலம் இன்னும் சில ஆண்டுகளில் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப நாசா விண்வெளி ஆய்வு மையம் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
3. சீனா தனது நான்காவது விமானந்தாங்கிக் கப்பலை கட்டி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து ஹாங்காங்கில் இருந்து வெளியாகும் சவுத் சீனா மார்னிங் போஸ்ட் நாளிதழ் வெளியிட்ட செய்தியில் கூறியிருப்பதாவது:
   i. லியோனிங் மாகாணத்தின் டாலியன் கப்பல் கட்டுமான தளத்தில் சீனாவின் நான்காவது விமானந்தாங்கிக் கப்பல் கட்டப்பட்டு வருகிறது.
   ii. ராணுவ வலிமை மிக்க நாடுகளிலேயே விமானந்தாங்கிக் கப்பல்களை கடைசியாக தனது கடற்படையில் சேர்க்கத் தொடங்கிய சீனாவிடம் தற்போது இரண்டு கப்பல்கள் உள்ளன மூன்றாவது விமானந்தாங்கிக் கப்பலான ஃபுஜியான் வெற்றிகரமாக சோதனைகள் மற்றும் பயிற்சிகளை நடத்தியுள்ளது. விரைவில் அது கடற்படையில் இணைக்கப்படும். இந்த மூன்று கப்பல்களும் பாரம்பரியமான எரிபொருள்களில் இயங்கக்கூடியவை.
   iii. ஆனால், நான்காவதாக தற்போது கட்டப்பட்டுவரும் விமானந்தாங்கிக் கப்பல் அணுசக்தியில் இயங்கும் வகையில் அமைக்கப்படுவதாகத் தெரிகிறது. அது

அந்தக் கப்பலின் தாக்குதல் எல்லையை விரிவுபடுத்தி, மேம்பட்ட சாதனங்களை இயக்குவதற்கு வழிவகுக்கும் என்று அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

4. தங்கள் நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சோடாவுக்கு இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்ட விவகாரத்தில், நார்வேயில் உள்ள தங்கள் தூதரகத்தை வெனிசுலா மூடியுள்ளது.
   i. இது குறித்து வெனிசுலா அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், நோபல் விவகாரம் குறித்து நேரடியாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், 'வெளிநாட்டு உறவுகளை மறுகட்டமைக்கும் நடவடிக்கைகளில் ஒரு பகுதி இது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
   ii. வெனிசுலாவில் ஜனநாயகத்தைக்காக்க பாடுபடுவதாகக் கூறி மரியா கொரினா மச்சோடாவுக்கு நோபல் பரிசு வழங்கிய நார்வே தேர்வுக் குழு, அரசு சார்பற்றது எனவும், இந்த விவகாரத்தில் வெனிசுலா தூதரகம் மூடப்பட்டது வருத்தமளிப்பதாகவும் நார்வே அரசு கூறியுள்ளது.

5. மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் 4-ஆவது இந்திய கடல்சார் வார விழா அக்.27-ஆம் தேதி தொடங்கி 5 நாள்கள் நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்றவுள்ளனர்.
   i. மும்பையில் அக்.27-ஆம் தேதி தொடங்கவுள்ள இந்திய கடல்சார் வார விழாவில் 100-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 500-க்கும் மேற்பட்ட துறைசார் நிபுணர்கள் உள்பட 1 லட்சம் போர் பங்கேற்கின்றனர் என்றார்.
   ii. இதைத்தொடர்ந்து, செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த மத்திய நீர்ப்போக்குவரத்துத் துறைச் செயலர் விஜய் குமார், 5 நாள்கள் நடைபெறும் இந்த விழாவில் கப்பல் கட்டுமானத் துறைக்கு ரூ.3 லட்சம் கோடி, நீடித்த வளர்ச்சிக்கு ரூ.2 லட்சம் கோடி, துறைமு கங்களை நவீனமயமாக்கும் திட்டத்துக்கு ரூ.2 லட்சம் கோடி, துறைமுகம் சார்ந்த தொழில்துறைக்கு ரூ.1 லட்சம் கோடி உள்பட மொத்தம் ரூ.10 லட்சம் கோடி வரை முதலீடுகள் ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்றார்.

6. இந்தியாவில் தரமற்ற 3 இருமல் மருந்துகள் அடையாளம் காணப்பட்டிருப்பது குறித்து உலக நாடுகளுக்கு உலக சுகாதார அமைப்பு (டபிள் யுஹெச்ஓ) எச்சரிக்கையை விடுத்துள்ளது.
   i. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'கோல்ட்ரிஃப்', 'ரெஸ்பிஃபிரஷ் டி.ஆர்', 'ரீலைஃப்' ஆகிய மூன்று இருமல் மருந்துகள் விநியோகம் தொடர்பாக கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறும், அவை விநியோகிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால் அவற்றை முழுமையாக திரும்பப் பெறுவதோடு, அதுகுறித்த தகவலை டபிள்யு ஹெச்ஓ-க்கு அறிவிக்கை செய்யுமாறும் உலக நாடுகளை டபிள்யுஹெச்ஓ கேட்டுக்கொண்டுள்ளது.

7. ரஷியா, சீனாவை எல்லைகளாகக் கொண்ட கிழக்காசிய நாடான மங்கோலியாவின் அதிபர் குரேல்சுக் உக்னா, நான்கு நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வந்தார். கடந்த 2021-இல் அதிபராகப் பதவியேற்ற இவர், இந்தியாவுக்கு வருகை தந்துள்ளது இதுவே முதல் முறையாகும்.
   i. மனிதாபிமான உதவி, மங்கோலி யாவில் பாரம்பரியத் தளங்கள் மீட்டெடுப்பு, குடிப்பெயர்வு, புவியியல்-கனிம வளங்கள் மற்றும் எண்மத் தீர்வுகள் பகிர்வில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.
   ii. இருதரப்பு மக்கள் ரீதியிலான தொடர்பை ஊக்குவிக்கும் வகையில், மங்கோலியப் பயணிகளுக்கு இந்தியா இலவசமாக இணையவழி விசா (நுழைவு இசைவு) வழங்கவுள்ளது.

iii. இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகம், மங்கோலியாவின் கண்டன் பௌத்த மடாலயம் இடையிலான வரலாற்றுத் தொடர்பை மேலும் வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பௌத்த மத நூல்களின் விரிவான ஆய்வுக்காக, கண்டன் மடாலயத்துக்கு சம்ஸ்கிருத ஆசிரியரை இந்தியா விரைவில் அனுப்பும்.

iv. 1.7 பில்லியன் டாலர் இந்திய கடனுதவியில் மங்கோலியாவில் கட்டமைக்கப்பட்டுவரும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், அந்நாட்டின் எரிசக்தி பாதுகாப்புக்கு புதிய வலுசேர்க்கும். இருதரப்பு உறவின் அடையாளச் சின்னமாக விளங்கும். 2,500-க்கும் மேற்பட்ட இந்தியப் பணியாளர்கள் இத்திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். வெளிநாடுகளில் இந்தியாவால் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் இது மிகப்பெரியது' என்றார் பிரதமர்.

8. ஆந்திர மாநிலத்துக்கு பயணிக்கும் பிரதமர் நரேந்திர மோடி, அங்கு ரூ.13,430 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவுள்ளார்.

   i. இந்தப் பயணத்தின்போது, ஸ்ரீசைலத்தில் உள்ள ஸ்ரீபிரமராம் பிகை உடனுறை மல்லிகார்ஜுன சுவாமி கோயிலில் பிரதமர் வழிபடவுள்ளார். பன்னிரண்டு ஜோதிர்லிங்க திருத்தலங்களில் ஒன்றான இக்கோயில், 52 சக்தி பீடங்களிலும் ஒன்றாகும். ஜோதிர்லிங்கமும், சக்தி பீடமும் ஒரே கோயிலில் அமையப் பெற்றிருப்பதால், இக்கோயில் தனித்துவம் வாய்ந்தது.

   ii. இங்கு வழிபட்ட பிறகு ஸ்ரீ சிவாஜி ஸ்பூர்த்தி கேந்திர வளாகத்தை பிரதமர் மோடி பார்வையிட உள்ளார். கடந்த 1677-இல் ஸ்ரீசைலத்துக்கு மராத்திய மாமன்னர் சிவாஜி வருகை புரிந்ததன் நினைவாக நிறுவப்பட்ட இந்த மையத்தில் பிரதாப்கட், ராஜ்கட், ராய்கட், ஷிவ்னேரி கோட்டைகளின் மாதிரிகள், நான்கு புறங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. சிவாஜி சிலையுடன் தியான அரங்கமும் உள்ளது.

9. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-

   i. கெய்ர் ஸ்டார்மர் - பிரிட்டிஷ் பிரதம மந்திரி
   ii. குரல்சுக் உகானே - மங்கோலிய ஜனாதிபதி
   iii. சுந்தர் பிச்சை - கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி